

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (24.06.2025) காலை, திருப்பூர் மாவட்டம், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த க.முத்துரத்தினம் தலைமையில் என்.பி.ரமேஷ், ரவி (எ) தர்மலிங்கம், கே.குமார் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் திருப்பூர் க.செல்வராஜ், எம்.எல்.ஏ., இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ். ஆஸ்டின், ப.தாயகம் கவி, தலைமை நிலைய அலுவலகச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா, மாவட்ட துணைச் செயலாளர் டிஜிட்டல் சேகர் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2025) முகாம் அலுவலகத்தில், தஞ்சாவூர் வடக்கு மாவட்ட கழகச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். கல்யாணசுந்தரம் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைப்புக் குழு நிர்வாகிகள் சந்தித்து, உள்ளாட்சிப் பொறுப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்புரிமை வழங்கியதற்காகவும், மாற்றுத்திறனாளிகள் வாழ்வு மேன்மையுற பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் டிசம்பர்3 இயக்கத்தின் தலைவரும், கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் செயலாளருமான பேராசிரியர் டி.எம்.என். தீபக், டிசம்பர்3 இயக்கத்தின் துணைத் தலைவர் மோகன்ராஜ், செயற்குழு உறுப்பினர் அண்ணாமலை மற்றும் நிர்வாகிகள் ஆகியோர் உள்ளனர்.



கலிக்கம்பட்டி ஊராட்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி புதிய நியாய விலைக் கடையை திறந்து வைத்து பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை விநியோகம் செய்தார். பின்னர் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக தீர்வு வழங்கினார். அருகில் கோட்டாட்சியர் சக்திவேல், திட்ட இயக்குனர் திலகவதி,ஒன்றிய செயலாளர் முருகேசன், தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் புவனேஸ்வரி அருளரசன், கோமதி செல்வகுமார் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### திருப்பூர் மாவட்டம் - மாற்றுக் கட்சியைச் சேர்ந்த

# சு.முத்துரத்தினம் தலைமையில் என்.பி.ரமேஷ், ரவி (எ) தர்மலிங்கம் - கே.குமார் கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!

**சென்னை, ஜூன் 25-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருப்பூர் மாவட்டம் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த க.முத்து ரத்தினம் தலைமையில் என்.பி.ரமேஷ், ரவி (எ) தர்மலிங்கம், கே.குமார் ஆகியோர் தி.மு.க. வில் இணைந்தனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (24 .06 2025) காலை, திருப்பூர் மாவட்டம், மாற்றுக் கட்சியைச் சேர்ந்த க.முத்து ரத்தினம் தலைமையில் என்.பி.ரமேஷ், ரவி (எ) தர்மலிங்கம், கே.குமார் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி, திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர் திருப்பூர் க.செல்வராஜ், எம்.எல்.ஏ., இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம் கவி, தலைமை நிலைய அலுவலகச் செயலாளர்கள் பூச்சி முருகன், துறைமுகம் காஜா, மாவட்ட துணைச் செயலாளர் டிஜிட்டல் சேகர் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் திருமங்கலம் தொகுதி செங்கப்படையில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் 3 ஆயிரம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர்ள மற்றும் பயனாளிகள் திரளாக பங்கேற்றனர்

